**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.80/2022** **நாள். 24.06.2026**

2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 24–ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 சீனிவாசன் த/பெ. ராசையன் என்கிற மருதகண்டர்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) நான்தான் மருதகண்டரின் வாரிசு என்பதற்கு என்னிடம் ஆவணங்கள் உள்ளது. கன்னியம்மாளுக்கும், மருதகண்டருக்கும் திருமணம் நடைபெற்றதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை. எனது அனுபவத்தில் உள்ள சொத்து மருதகண்டர் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். மருதகண்டருக்கு விவசாயம் மட்டும்தான் தொழில் ஆகும். நான் குடியிருக்கும் வீடானது மருதகண்டர் கிரையம் வாங்கி சொத்து ஆகும். நான் குடியிருக்கும் வீடானது அணிச்சம்பாளையம், கிழக்கு தெருவில் உள்ளது. வீட்டின் கதவு எண்.27/41 ஆகும். மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது. மின் இணைப்பு எண்.71 ஆகும். மேற்படி மின் இணைப்பிற்காக மின் கட்டண ரசீது என் பெயரில் உள்ளது.

2) நான் வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது ஆகியவற்றை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேலூர் 12வது வார்டு என்பது எந்த பகுதி என்றால் எனக்கு தெரியாது. வேலூரில் 12வது வார்டில் உள்ள நல்லான் மகன் மாயவன் என்பவரை எனக்கு தெரியாது. வேலூரில் 6வது வார்டில் உள்ள சுப்பிரமணி மகன் கார்த்திக் என்பவரை எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் தெருவில் உள்ள பொன்னுசாமி மகன் கணேசன் என்பவரை எனக்கு தெரியாது.

எனது பிராதில் என் தகப்பனார் 2 தான பத்திரம் எழுதி வைத்ததாக சொல்லவில்லை, அவர் எழுதி வைத்த ஒரு தானப்பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பின்னிட்டு, மற்றொரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை குறிப்பிட்டு அதில் உள்ள சொத்துக்களை வழக்கில் சேர்த்தேன் என்றால் சரிதான்.

3) மருதகண்டர் எழுதி வைத்த உயில் பற்றி எனக்கு தெரியுமா என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு ஒரு மாதம் முன்பு 2022–ல் தான் மேற்படி உயிலைப்பற்றி எனக்கு தெரியும். மேற்படி உயிலின் நகலை நான் படித்து பார்க்கவில்லை. உயில் இருக்கிறது என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் வில்லங்க சான்று மற்றும் உயிலின் நகலை பெற்று பார்த்தேன். மருதகண்டர் எழுதி வைத்த உயில் பற்றி நான் தாக்கல் செய்வதற்கு முன்பு தெரிந்து கொண்டும், அந்த உயில் பற்றி என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நல்லான் மகன் மாயவன், சுப்பிரமணி மகன் கார்த்திக், பொன்னுசாமி மகன் கணேசன் ஆகியோர்கள் உயிலில் சாட்சி கையொப்பம் போட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4) எனது திருத்திய பிராதிலும், ஐயப்பன் அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கின் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலும் மேற்படி உயில் பொய்யான ஆவணம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். உயிலைப்பற்றி விவரம் எனக்கு முன்பே தெரிந்து கொண்டு பொய்யாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மருதகண்டருக்கு பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து, எனக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்க அவருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் பத்திரத்தை மருதகண்டர் ரத்து செய்தது சரிதான் என்றால் சரியல்ல. உயிலில் ஒரு சில சொத்துக்கள் எனக்கும், ஒரு சில சொத்துக்கள்

ஐயப்பனுக்கும், ஒரு சில சொத்துக்கள் ஐயப்பனின் மகன் கமலேஷ்வருக்கும் பாத்தியப்படுத்தி எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) பொதுக்குடும்ப சொத்துக்களை மருதகண்டருக்கு பிரித்து எழுதி வைக்க உரிமையுள்ளது என்றாலும், அதனால், அந்த உயில் சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும் சரியல்ல. மேற்படி உயிலில் என்னை வளர்ப்பு மகன் என்றுதான் குறிப்பிட்டு மருதகண்டர் உயில் எழுதியுள்ளார் என்றால் சரிதான். உயிலின் அடிப்படையில் ஐயப்பன் தாக்கல் செய்துள்ள வழக்கை அனுமதித்தும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.06.24 18:10:27 +0530

Sub Judge,
Paramathy